DINA MALAR

1 FEB 2022

PAGE 2

# ஆன்லைனில் நாடக விழா: அமைச்சர் துவக்கி வைப்பு




■ புதுச்சேரி கலை மற்றும் பண்பாட்டுத்துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழகம் இணைந்து, ஆன்லைன் வாயிலாக நடைபெறும் நாடக விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா குத்துவிளக்கு ஏற்றி துவக்கி வைத்தார். அருகில் எம்.எல்.ஏ.. வைத்தியநாதன்.

**புதுச்சேரி, பிப். 1–**

புதுச்சேரி கலை பண்பாட்டு துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் மற்றும் புதுச்சேரி பல்கலைக்கழக கலைத் துறை சார்பில், ஆன்லைன் வாயிலாக நாடக விழா நேற்று துவங்கியது.

கொரோனா தொற்று காலத்தில், நலிந்த நாடக கலைஞர்களுக்கு உதவும் வகையில், ஆன்லைன் வழியாக நாடக விழா நடத்த அரசு முடிவு செய்தது.

அதன்படி, புதுச்சேரி, காரைக்கால் மாவட்டத்தில் உள்ள 31 நாடகக் குழுக்கள், புதுச்சேரி பல்கலைக் கழகத்தின் 3 குழுக்கள் மற்றும் தஞ்சை தென்னக பண்பாட்டு மையத்தின் ஒரு குழு என, மொத்தம் 35 குழுக்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

கொரோனா தொற்று காரணமாக, பார்வையாளர்கள் இன்றி நடத்தப்படும் நாடக விழா முழுவதையும் வீடியோ பதிவு செய்து, தென்னக பண்பாட்டு இணையதள பக்கத்தில் பதிவேற்றப்பட உள்ளது.

லாஸ்பேட்டை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன தொல்காப்பியர் அரங்கில் நேற்று துவங்கிய நாடக விழாவை, கலை பண்பாட்டு துறை அமைச்சர் சந்திரபிரியங்கா துவக்கி வைத்தார்.

வைத்தியநாதன் எம்எல்.ஏ., அரசு செயலர் நெடுஞ்செழியன் முன்னிலை வகித்தனர். கலை பண்பாட்டு துறை இயக்குநர் கந்தன் வரவேற்றார்.

புதுச்சேரி பல்கலைக் கழக நிகழ்கலை பள்ளி புல முதன்மையர் ஸ்ரீதரன், துறை தலைவர் (பொறுப்பு) ராஜாரவிவர்மா, மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பிரகதி, தென்னக பண்பாட்டு மையம் இயக்குநர் கெய்வட்கர் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

நாடக விழா, வரும் 7ம் தேதி வரை நடக்கிறது. தினசரி 5 நாடகம் வீதம், 35 நாடகங்கள் அரங்கேற்றப்பட உள்ளன.

DINA THANTHI

1 FEB 2022

PAGE 11




நாடக கலை விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்து பேசியபோது எடுத்த படம். அருகில் வைத்தியநாதன் எம்.எல்.ஏ. மற்றும் அதிகாரிகள் உள்ளனர்.

### கலை பண்பாட்டு துறை சார்பில்

# மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நாடக விழா

## அமைச்சர் சந்திரபிரியங்கா தொடங்கி வைத்தார்

புதுச்சேரி, பிப்.1-

கலை பண்பாட்டு துறை சார்பில் மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நடந்த நாடக விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்தார்.

### நாடக விழா

புதுச்சேரி அரசு கலை பண்பாட்டு துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம், புதுச்சேரி பல்கலைக்கழக நிகழ் கலைத்துறை சார்பில் லாஸ்பேட்டையில் உள்ள மொழியியல் ஆராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்நிலை (ஆன்லைன்) நாடக விழா ஒரு வாரம் நடைபெற உள்ளது.

இதன் தொடக்க விழா நேற்று காலை நடந்தது. விழாவிற்கு தொகுதி எம்.எல்.ஏ. வைத்தியநாதன் தலைமை தாங்கினார். விழாவில் அமைச்சர் சந்திர பிரியங்கா கலந்துகொண்டு நாடகவிழாவினை தொடங்கி வைத்து பேசினார். அப்போது அவர் கூறியதாவது:-

புதுச்சேரி முதல்-அமைச்சர் ரங்கசாமி எல்லா மக்களுக்கும் எல்லாவித நலத்திட்ட உதவிகளும் கிடைக்க வேண்டும் என்று தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். நாடகம் ஒரு கலை. இது அழியவே கூடாது. சுதந்திர போராட்ட காலத்தில் போராட வேண்டும் என்ற உணர்வை தூண்டியது நாடகம் தான். சிறப்புமிக்க போராளிகள் நாடக கலைஞர்கள். இவர்கள் தங்கள் திறமைகளை மேலும் வளர்த்துகொள்ளவேண்டும்.

இவ்வாறு அவர் கூறினார்.

### 35 நாடகங்கள்

விழாவில் கலை பண்பாட்டு துறை செயலாளர் நெடுஞ்செழியன், பல்கலைக்கழக நிகழ் கலைப்பள்ளி டீன் ஸ்ரீதரன், கலை பண்பாட்டு துறை இயக்குனர் சிவராசன் மற்றும் பலர் கலந்துகொண்டனர்.

விழாவில் தினந்தோறும் 5 நாடகங்கள் வீதம் வருகிற 6-ந் தேதி வரை 7 நாட்கள் மொத்தம் 35 நாடகங்கள் நடைபெறுகிறது.

கொரோனா தொற்று காலத்தில் வாழ்வாதாரம் இன்றி நலிந்த நிலையில் உள்ள நாடக கலைக்குழுவுக்கு உதவிடும் வகையில் ஒவ்வொரு குழுவுக்கும் தலா ரூ.30 ஆயிரம் வீதம் ரூ.10 லட்சத்து 50 ஆயிரம் வழங்கப்பட உள்ளது. மத்திய அரசின் கலாசார அமைச்சகத்தின் முகநூல் (பேஸ்புக்) பக்கத்தில் இந்த நாடகங்கள் பதிவேற்றம் செய்யப்படும்.

DINAKARAN

1 FEB 2022

PAGE 6

கலை, பண்பாட்டுத்துறை சார்பில்

# நிகழ்நிலை நாடக விழா

## அமைச்சர் தொடங்கி வைத்தார்




லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தில் நிகழ்நிலை நாடக விழாவை அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்து பேசினார்.

**புதுச்சேரி, பிப். 1:** புதுச்சேரி அரசு கலை மற்றும் பண்பாட்டுத்துறை, தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் மற்றும் புதுவை மத்திய பல்கலைக்கழகத்தின் நிகழ் கலைத்துறை ஆகியவை இணைந்து ஜன.31ம் தேதி முதல் பிப்.6ம் தேதி வரை நிகழ்நிலை (ஆன்லைன்) நாடக விழாவை நடத்துகின்றன. இதன் தொடக்க விழா லாஸ்பேட்டையில் உள்ள புதுச்சேரி மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனத்தின் தொல்காப்பியர் அரங்கில் நேற்று நடந்தது. அமைச்சர் சந்திர பிரியங்கா தொடங்கி வைத்தார். வைத்திநாதன் எம்எல்ஏ, கலை, பண்பாட்டுத்துறை செயலர் நெடுஞ்செழியன், இயக்குநர் கந்தன் (எ) சிவராசன், மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவன இயக்குநர் பிரகதி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

கொரோனா பெருந்தொற்று காலத்தில் வாழ்வாதாரம் இழந்து நலிந்த நிலையில் உள்ள நாடக கலைஞர்களுக்கு உதவிடும் வகையில் புதுச்சேரி மற்றும் காரைக்கால் பகுதியை சேர்ந்த தேர்வு செய்யப்பட்ட 31 நாடகக் குழுக்கள், புதுச்சேரி பல்கலைக்கழக நாடகத்துறை மாணவர்களுக்கு 3 நாடகங்கள், தஞ்சை தென்னக பண்பாட்டு மையம் சார்பில் 1 நாடகக்குழு என 35 குழுக்களுக்கு இவ்விழாவில் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. கொரோனா பெருந்தொற்று காரணமாக விழாவை முழுமையாக வீடியோ பதிவு செய்து தஞ்சை தென்னகப் பண்பாட்டு மைய பேஸ்புக் வழியாக ஒளிபரப்பப்படுகிறது. நேற்று முதல் பிப்.6ம் தேதி வரை தொடர்ந்து 7 நாட்கள் தினமும் 5 நாடகங்கள் வீதம் நடத்தப்பட உள்ளன. ஒவ்வொரு கலைக்குழுவிற்கும் தலா ரூ.30 ஆயிரம் வீதம் 35 குழுக்களுக்கும் ரூ.10.50 லட்சம் வழங்கப்படவுள்ளது. மேலும், மத்திய அரசின் கலாசார அமைச்சகத்தின் பேஸ்புக் பக்கத்திலும் இந்த நாடகங்கள் பதிவேற்றம் செய்யப்படுகிறது.